**தலைப்பு 237 – தேசிய திட்டமிடல் திணைக்களம்**

--------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 237 – தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூன் 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

## 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 03 செலவின விடயங்களுக்காக 2022 ஆம் ஆண்டின் போது ஒதுக்கப்பட்ட கூட்டு மொத்தமான ரூபா 275,000 ஆன மொத்த தேறிய நிதிஏற்பாடும் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | 2022 ஆம் ஆண்டில் செலவினங்களை செய்வதற்காக அதிகாரம் வழங்குதல் மற்றும் அரச செலவின முகாமைத்துவம் தொடர்பாக 2021 திசெம்பர் 21 ஆம் திகதிய 03/2021 ஆம் இலக்க வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் செலவின கட்டுப்பாட்டினால் 03 செலவின விடயங்களுக்கான நிதிஏற்பாடு பயன்படுத்தப்படவில்லை. | நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியாகவும் சாத்தியமானதாகவும் வருடாந்த செலவின மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | திட்டமிடப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்கு 12 செலவின விடயங்களுக்காக 2022 ஆம் ஆண்டின் போது ஒதுக்கப்பட்ட ரூபா 11,858,397 கூட்டுத் தொகையான நிதி ஏற்பாட்டில் கவனத்தில் கொள்ளக் கூடிய அளவான ரூபா 8,231,089 தொகை பயன்படுத்தப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது. அது அந்த செலவின விடயங்களின் மொத்த நிதி ஏற்பாட்டில் 54 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையிலான வீச்சினை கொண்டிருந்தது. | மேற்கூறப்பட்ட வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் ஆலோசனையின் படி நிதிஏற்பாட்டினை பயன்படுத்தாமல் திணைக்களத்தின் கீழ் காணப்பட்ட பிரதேச அபிவிருத்தி பிரிவின் நடவடிக்கைகள் முடிவடைந்தமையால் உத்தியோகத்தர்கள் விடுவிக்கப்பட்டமை மற்றும் இடம் மாற்றலாகி சென்றமையினால் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியாகவும் சாத்தியமானதாகவும் வருடாந்த செலவின மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். |
| (இ) | பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் நிதிஏற்பாடு ஒதுக்கப்படாத 04 செலவின விடயங்களுக்காக நிதிப் பிரமாணம் 66 இன் பிரகாரம் கூட்டுமொத்தமாக ரூபா 43,864,155,744 நிதி ஏற்பாடு மாற்றப்பட்டிருந்தது. | அவசர தேவைக்காக இந்த செலவின விடயத்தில் நிதி ஏற்பாட்டின் தேவை 2022 ஆம் ஆண்டின் போது எழுந்தமையினால் மேலதிக நிதி ஏற்பாடு நிதிப் பிரமானம் 66 இன் மூலம் வழங்க வேண்டி ஏற்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியாகவும் சாத்தியமானதாகவும் வருடாந்த செலவின மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் போதியளவான பிரகாரம் நிதிஏற்பாடு ஒதுக்கப்படாதிருந்த 07 செலவின விடயங்களுக்காக கூட்டுமொத்தமாக ரூபா 8,323,095,612 தொகை மீளாய்வாண்டின் குறைநிரப்பு மதிப்பீட்டு நிதி ஏற்பாட்டின் மூலமும், நிதிப் பிரமாணம் 66 இன் மூலமும் நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக நிதி ஏற்பாடு பெறப்பட்டதன் பின்னர் 05 செலவின விடயங்களில் | சந்தையில் பொருட்கள் பற்றாக்குறையினால் அத்தியவசியமாக காணப்பட்ட டோனர் மற்றும் அலுவலக காகிதாதிகளின் விலைகள் மதிப்பீடு செய்யப்பட்ட விலைகளை விட அதிகரித்துச் சென்றமை, பணிப்பாளர் பதவிகளின் மேவுகை நடவடிக்கைகளுக்காக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டமை, கொடுப்பனவை செய்வதற்கான உறுதிச் சீட்டுக்கள் கிடைக்காமை, உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் | நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியாகவும் சாத்தியமானதாகவும் வருடாந்த செலவின மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| கூட்டுமொத்தமாக ரூபா 272,785,724 ஆன நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | வழங்கப்பட்ட பொருள் உதவிகளை கணக்கீடு செய்தல் மற்றும் அந்த பொருள் உதவிகளை துறைமுகத்தில் இருந்து விடுவித்து பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகளுக்கான செலவினத்திற்காக நிதி ஏற்பாடு ஒதுக்கிக் கொள்ள வேண்டி ஏற்பட்டமை மற்றும் Promoting Autonomy, Literacy and Attentives Through Market Alliance Project in Sri Lanka செயற்திட்டத்தின் கீழ் இந்த நாட்டிற்கு பொருள் உதவியாக கிடைத்த பொருள் உதவிகளின் பெறுமதி திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டி ஏற்பட்டமையின் காரணமாக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடு போதியளவில் காணப்படவில்லை. |

## 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 13 ஆம் திகதிய இலக்கம் 2022/05 என்ற அரச கணக்குகள் வழிகாட்டியின் 7.6 ஆம் பந்தியின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்றில் காசு மற்றும் வரவு குறிப்புகள் என்ற இரண்டும் கவனத்தில் கொள்ளப்பட்டு நேர்முறை பயன்படுத்தி தயாரிக்கப்பட வேண்டியமை காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒன்றிணைந்த விரிவான பரீட்சை மீதியின் பிரகாரம் முற்பண | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்றில் காசாக மாத்திரம் ஏற்படுகின்ற கொடுக்கல் வாங்கல்கள் மாத்திரம் குறிப்பிடப்பட வேண்டியிருந்தமையினால் காசல்லாத கொடுக்கல் வாங்கல்கள் உள்ளடக்கப்படவில்லை. | அரசாங்க கணக்குகள் வழிகாட்டின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படல் வேண்டும். |

அறவிடல்கள் ரூபா 7,354,843 தொகையும், முற்பண செலுத்துதல்கள் ரூபா 6,002,111 தொகையும் காணப்பட்டது. எனினும், அந்த காசுப்பாய்ச்சல் கூற்றில் முறையே ரூபா 5,638,363 மற்றும் ரூபா 4,285,631 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் முற்பணத்திற்காக காசு உள்வருதல் மற்றும் வெளிச் செல்லல் ரூபா 1,716,480 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

### 3.1.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2022 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்ட போதிலும், சுற்றறிக்கையின் 3(அ) பந்தியின் பிரகாரம் வருடாந்த செயற்பாடுகளுக்கான கட்டுநிதி தேவைத் திட்டம் மற்றும் மூலதன அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கான வருடந்த பெறுகை திட்டம் என்பன உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை . | திணைக்களத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்துடன், வருடாந்த கட்டுநிதி தேவைத் திட்டம் மற்றும் பெறுகை திட்டம் என்பன தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த திணைக்களத்தின் உள்ளக கணக்காய்வு பிரிவொன்று காணப்படாதிருந்ததுடன், நிதி அமைச்சின் உள்ளக கணக்காய்வு பிரிவிடம் விசாரணை செய்து இந்த பணிகள் நிறைவேற்றப்படுகின்றது. | அரச நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். |

### 3.1.2 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் சகல அரசாங்கத்தின் திணைக்களங்களும் ஒவ்வொரு ஆண்டிற்காகவும் அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டை அமுல்படுத்துவதற்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்க வேண்டியிருந்ததுடன், எதிர்வரும் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் நடப்பாண்டின் திசெம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு சமர்ப்பித்து அங்கீகாரம் பெறவேண்டியிருந்த போதிலும், உலக உணவு நிகழ்ச்சித் திட்டம் (World Food Program) இன் கீழ் மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டம் சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரித்து கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | இந்த செயற்திட்டம் 2023 சனவரி 01 முதல் சனாதிபதி செயலகத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் சகல கோவைகளும் பொருட்கள் போன்றவற்றை உள்ளடக்கிய செயற்திட்டத்திற்கு பொறுப்பாக உள்ள சனாதிபதி செயலகத்தின் கீழ் வருவதுடன், கணக்காய்விற்காக தேவையான தகவல்கள் செயற்திட்ட அலுவலகத்துடன் தொடர்பை ஏற்படுபடுத்தி உரிய தகவல்கள் தற்போது வழங்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 வெளிநாட்டு உதவி செயற்திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் கீழ் வெளிநாட்டு கடன்/ உதவிகளை பயன்படுத்தி அமுல்படுத்தப்படுகின்ற 02 | உலக உணவு கடன் உதவியின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார நெருக்கங்களின் | செயற்திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக வழங்கப்பட்ட நிதிஏற்பாடு |

| | | | |
|---|---|---|---|
| | வெளிநாட்டு செயற்திட்டங்களான சமூக நிலையினை ஸ்தீரத் தன்மையினை ஏற்படுத்துதல் மற்றும் பொருளாதார கஷ்டங்களின் காரணமாக தாக்கத்திற்கு உட்படுகின்ற குடும்பங்களுக்கு உதவி வழங்குவதற்காக அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டத்தில் 02 செலவின விடயங்களுக்காக 2022 ஆம் ஆண்டின் போது ஒதுக்கப்பட்ட கூட்டுமொத்தமாக ரூபா 634,104,060 ஆன மொத்த தேறிய நிதி ஏற்பாடும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தாக்கங்களை குறைத்துதல் மற்றும் சமூக ஸ்தீர நிலையை நல்ல நிலைக்கு கொண்டுவருவதற்கான செயற்திட்டத்திற்காக ஆரம்பமாக USD 400 வழங்குவதற்கு உலக வங்கி இணங்கியிருந்த போதிலும், USD 325 வரை குறைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் செயற்திட்டத்தின் மூலம் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட சுகாதார துறைக்குரிய பணிகளை அமுல்படுத்தாமை மற்றும் பொருளாதர கஷ்டங்களின் காரணமாக தாக்கத்திற்கு உட்படுகின்ற குடும்பங்களுக்கு உதவி வழங்கும் செயற்திட்டத்தின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் வழங்கப்பட்ட உதவிக்காக ரூபாய் கணக்கு திறப்பதற்காக நிதி ஏற்பாடு வழங்கப்பட்டமையால் இந்த நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது, | செயற்திறனாக பயன்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) | சமூக ஸ்தீரத்தன்மையினை ஏற்படுத்தும் செயற்திட்டத்தின் செலவின விடய இலக்கம் 237-1-1-19-1501-23/12 என்ற வெளிநாட்டு கடனின் கீழ் நிதியீட்டம் செய்யப்பட்ட தேறிய நிதி ஏற்பாடு ரூபா 20,630,000,000 இனால் ரூபா 8,065,654,415 மாத்திரம் செலவிடப்பட்டு ரூபா 12,564,345,584 தொகை அதாவது தேறிய நிதி ஏற்பாட்டில் 61 சதவீத அளவு சேமிக்கப்பட்டிருந்தது. இந்த சேமிப்பு காரணமாக உலக வங்கி செயற்திட்டத்தின் கீழ் யூரியாவிற்கான | உலக உணவு செயற்திட்டத்தின் கீழ் யூரியா கொள்வனவு செய்வதற்கான பெறுகை நடவடிக்கைகள் தாமதமடைந்தமையால் இந்த நிதிஏற்பாட்டை பயன்படுத்த முடியாதிருந்தது. அவ்வாறே திசெம்பர் மாதத்தின் இறுதியில் மெற்றிக் டொன் 16,787.20 மற்றும் மெற்றிக் டொன் 11,200 யூரியா பசளை இந்த நாட்டிற்கு கொண்டுவந்திருந்த போதிலும், உலக வங்கி உதவி செலுத்துதலை மேற்கொண்டு அறிக்கையிடல் | செயற்திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக வழங்கப்பட்ட நிதிஏற்பாடு செயற்திறனாக பயன்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறுகைகள் தாமதமடைந்ததாக காண்பிக்கப்பட்டிருந்தது. | நிறுத்தப்பட்டமையின் காரணமாக நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | |
| (இ) | திணைக்களத்தின் மூலம் சமூக ஸ்திர நிலைமையை ஏற்படுத்துதல் மற்றும் பொருளாதார கஷ்டங்களின் காரணமாக தாக்கத்திற்கு உட்பட்ட குடும்பங்களுக்கு உதவி வழங்குவதற்காக அமுல்படுத்தப்பட்ட வெளிநாட்டு கடனின் கீழ் நிதியீட்டம் செய்யப்பட்ட செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட கூட்டு மொத்தமான ரூபா 98,919,000,000 நிதி ஏற்பாடுகளை கூட்டுமொத்தமாக ரூபா 71,654,995,940 நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த செலவின விடயத்திற்காக பயன்படுத்தப்படாமல் ஏனைய செலவின விடயங்களுக்காக மாற்றப்பட்டிருந்தது. அந்த அளவு செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட் டநிதி ஏற்பாட்டில் 44 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது. | சமூக ஸ்திர நிலைமையை ஏற்படுத்தும் செயற்திட்டத்தில் பசளை மற்றும் லிட்ரோ எரிவாயுக்காக நலனாளிகளிடம் இருந்து பணம் அறவிடுவதற்கு பின்னர் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தேவையான நிதி ஏற்பாடு 2302- கடன் வழங்கும் செலவின விடயத்தின் கீழ் ரூபா 39,220,000 மாற்ற வேண்டி ஏற்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தில் சுகாதார நிகழ்ச்சித் திட்டத்திற்காக வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளில் ரூபா 15,990,995,940.00 நிதி ஏற்பாடு பொருளாதார கஷ்டங்களின் காரணமாக தாக்கத்திற்கு உட்பட்ட குடும்பங்ளுக்கு உதவி வழங்குவதற்கான செயற்திட்டத்திற்காக ரூபா 10,554,777,900 தொகையும், உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்திற்காக ரூபா 4,292,450,601.94 மற்றும் PALAMA செயற்திட்டத்திற்கு ரூபா 1,143,767.94 தொகையுமான நிதி ஏற்பாடு மாற்றப்பட்டிருந்தது. அவ்வாறே இந்த செய்றதிட்டத்தின் கீழ் சேமிக்கப்பட்ட நிதி ஏற்பாடான ரூபா 16,444,000,000 தொகை அந்த செயற்திட்டம் இரண்டினதும் பணிகளுக்காக சமூர்த்தி மானியங்கள் வயது வந்தோர் உதவி மற்றும் | செயற்திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக வழங்கப்பட்ட நிதிஏற்பாடு செயற்திறனாக பயன்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | சிறுநீரக நோய் பாதிப்புக்குள்ளானவர்களுக்கு உதவிகளை வழங்குவதற்கான செலவின விடயங்களுக்கு இடையே மாற்றப்பட்டிருந்தது. | |
| (ஈ) | பொருளாதார கஷ்டங்களின் காரணமாக தாக்கத்திற்கு உட்பட்ட குடும்பங்களுக்கு உதவி வழங்கும் செயற்திட்டத்தின் 04 செலவின விடயங்களுக்காக மீளாய்வாண்டில் நிதிப் பிரமாணம் 66 இன் மூலம் கூட்டுமொத்தமாக ரூபா 26,998,677,900 நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக நிதி ஏற்பாடு வழங்கப்பட்டதன் பின்னர் அந்த செலவின விடயங்களின் சேமிப்பின் கூட்டுமொத்தம் ரூபா 1,224,281,422 ஆக காணப்பட்டது. | எதிர்பார்க்கப்பட்ட செலவின மதிப்பீடு சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் செய்யப்பட்டதாகும். உரிய பிரிவுகளில் இருந்து வழங்கப்பட்ட இதற்காக அடிப்படையாக கொள்ளப்பட்டது. எனினும். இந்த கொடுப்பனவுகளை செய்யும் போது ஏற்படக் கூடிய இரட்டை கணிப்பீடுகளை தவரிப்பதற்காக அரசினால் ஆலோசனை வழங்கப்பட்டமையால் உள்ளபடியான செலவினங்கள் இந்த எதிர்பார்த்த செலவினத்தை விட குறைவாக அறிக்கையிட்டமையினால் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக வழங்கப்பட்ட நிதிஏற்பாடு செயற்திறனாக பயன்படுத்துதல் வேண்டும். |

## 3.3 வருடாந்த பொருள் மெய்மெய்யாய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ஆகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி திணைக்களத்தில் இருந்து இடம் மாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த லெப்டொப் கணனி கணக்காய்வு திகதியான 2023 மே 10 ஆம் திகதி வரையிலும் திணைக்களத்திற்கு மீள கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்தமை | தற்போது வரையிலும் இந்த திணைக்களத்திற்கு இந்த லெப்டெப் கணனி கையளிக்கப்படாமையினால் 2022.12.13 ஆம் திகதி கடிதமும் அந்த நபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், இது வரை உரிய பதில் கிடைக்கவில்லை. உங்களின் 2023.05.12 ஆம் திகதிய கணக்காய்வு ஐயவினா கிடைத்ததன் பின்னரும் | மாற்றலாகிச் செல்கின்ற சந்தர்ப்பங்களின் போது உத்தியோகத்தர்களின் பொறுப்பில் உள்ள சொத்துக்களை மீளப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் |

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்குரிய பொருள் மெய்மெய்யாய்வு அறிக்கை பரீட்சித்த போது அவதானிக்கப்பட்டது. | மேற்கூறப்பட்ட லெப்டொப் கணனியை கையளிக்குமாறு 2023.05.19 ஆம் திகதி சனாதிபதி செயலகத்திற்கு அறிவித்து அனுப்பப்பட்டிருந்தது. இந்த லெப்டொப் கணனி முறையான பிரகாரம் கையளிக்கப்படும் வரை அவரின் ஆளனி கோவை இந்த அலுவலகத்தில் நிறுத்தி வைக்க்பபட்டுள்ளது என அறியத்தருகின்றோம். | வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டிற்காக நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி இலக்கை இனங்காணல் மற்றும் அவற்றை அடைந்து கொள்வதை அளவிடுவதற்காக தேவையான குறிகாட்டிகளை இனங்காணல் மற்றும் அதற்குரிய சரியான தரவு முறைமையொன்றை ஏற்படுத்துவதற்கு திணைக்களத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்படவில்லை. | ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டிற்காக நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி இலக்கினை இனங்காணல் மற்றும் அவற்றினை அடைந்து கொள்வதை அளவிடுவதற்காக தேவையான குறிகாட்டிகளை இனங்காணல் மற்றும் அதற்குரிய சரியான தரவு முறைமையொன்றை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கும் நிலைபேறான அபிவிருத்தி தேசிய சபையின் மூலம் உரிய நிறுவனத்துடன் அமுல்படுத்தப்படுகின்றது. அதற்காக தேசிய திட்டமிடல் திணைக்களமும் தேவையான உதவியை தற்போது வழங்கியுள்ளது. | நிலைபேறான அபிவிருத்தி இலக்கை இனங்காணல் மற்றும் அவற்றின் அடைவை மதிப்பிடுவதற்காக தேவையான குறிகாட்டிகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |

## 5. மனிதவள முகாமைத்துவம்

### 5.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட பதவியணியினர் தரவுகளின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தின் ஒட்டு மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 26 ஆகும். அதனிடையே சிரேஷ்ட நிலையில் 16 பதவிகள் சில வருடங்களாக வெற்றிடமாக காணப்பட்டது. | அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை 02/2022 இன் ஆலோசனையின் படி முதலாவது வகுப்பின் சகல பதவி வெற்றிடங்களையும் நிரப்புவதற்காக நேர்முகப் பரீட்சை நடாத்துவதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | முறையான பிரகாரம் நடவடிக்கை எடுத்து வெற்றிடங்களை நிரப்புவதற்கோ அல்லது ஊழியர் எண்ணிக்கையை நாளது வரையாக்குவதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | தாபன விதிக் கோவையின் 13.3 ஆம் பிரிவின் பிரகாரம் பதவி ஒன்றில் முழு நேரமாக உத்தியோகத்தர்களின் சேவை தேவையாயின் உள்ளபடியான நியமனம் தாமதமின்றி மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், திணைக்களத்தின் நூலகர் பதவி 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் வெற்றிடமாக காணப்பட்டது. | பல சந்தர்ப்பங்களின் போது வெற்றிடத்தை நிரப்புமாறு அரச நிர்வாக அமைச்சுக்கு கோரப்பட்டிந்த போதும் இது வரை வெற்றிடங்கள் நிரப்புவதற்கு நடவபடிக்கை எடுக்கப்படவில்லை. எனினும், தற்போது எங்களால் இனங்காணப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் நூலகராக நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | முறையான பிரகாரம் நடவடிக்கை எடுத்து வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |